**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case number | : | CC 76/2025 |
| Deposition of witness | : | PW-7 |
| Name | : | **செந்தில்நாதன்** |
| Father Name | : | **சிவலிங்கம்** |
| Age | : | 39 |

**Accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 09.02.2026.

**முதல் விசாரணை தொடர்ச்சி**

7. என்னிடம் எதிரி நகையை அடமானம் வைத்ததற்காக சிசிடிவி பதிவு உள்ளது. அதனை தற்போது நீதிமன்றத்தில் ஆஜர் செய்கிறேன். மேற்படி பதிவு நீதிமன்றத்தில் எதிரிக்கு கணினி மூலம் காண்பிக்கப்பட்டு, சரிபார்க்கப்பட்டு **அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. அதே எதிரி அதற்கு முன்னர் நகைகளை எங்கள் கடையில் அடைமானம் வைத்துள்ளாரா என்றால் இல்லை அதுதான் முதல் முறை. நான் மேற்படி பைனான்ஸில் இரண்டு ஆண்டுகளாக வேலை செய்து வருகிறேன். இந்த விவரத்தை போலீஸ் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். போலீசார் விசாரணையின் போது கடையின் உரிமத்தை

கொடுத்தேனா என்றால் உரிமத்தை பார்த்தார்கள், நகல் கொடுக்கவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக கடையின் உரிமையாளர் பாண்டியனை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்களா என்றால் போலீஸ் விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள்.

2. எந்த காரணத்திற்காக எதிரி அடமானம் வைத்தார் என்று போலீஸ் விசாரணையில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். நான் போலீசில் கையொப்பம் செய்வதற்கு முன்பாக படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். நான் கையொப்பம் செய்த தாளில் உள்ள அனைத்தையும் தற்போது ஒப்புவிக்க முடியுமா என்றால் எனக்கு அந்த அளவிற்கு ஞாபகம் இல்லை. எனது கடையில் வைத்துதான் போலீசார் கைப்பற்றினார்கள். நான் எனது வாக்குமூலத்தில் மட்டும்தான் கையொப்பம் செய்தேனா என்றால் போலீசார் நகைகளை கைப்பற்றியதற்கும் சாட்சியாக கையொப்பம் பெற்றார்கள்.

3. நவீன் குமாரை தெரியுமா என்றால் அன்றைய தினம் போலீசார் மற்றும் எதிரியுடன் வந்திருந்தார். போலீசார் எங்கள் கடையில் நகையை கைப்பற்றியது சிசிடிவி கேமராவில் பதிவாகி இருக்கும் என்றால் சரிதான். எதிரி நகையை எங்கள் கடையில் அடமானம் வைக்கும்போது நல்ல நிலைமையில் தான் இருந்தது. அப்போது நகையை வாங்கும்போது நகை பார்த்தவுடன் தங்கம் என்று தெரிந்ததாலும் எதிரி அவரது சொந்த நகை

என்று சொன்னதாலும் அதனை தேய்த்து பார்க்கவில்லை. நகை ரசீதில் நகையின் மாடலை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த நகையில் சேதாரம் இருந்திருந்தால் சேதாரத்தை பற்றி ரசீதில் குறிப்பிட்டிருப்பேன் என்றால் சரிதான். எதிரி கையொப்பம் செய்தது, நவீன் குமார் கையொப்பம் செய்தது, நான் கையொப்பம் செய்தது எல்லாமே எனது கடையில் வைத்து தான் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த நிகழ்வுகள் சிசிடிவி கேமராவில் பதிவாகி இருக்கும் என்றால், அவை கடைக்கு உள்ளே வைத்து செய்யப்பட்டது கடைக்கு வெளியில்தான் கேமரா உள்ளது. ஆனால் அவர்கள் கடைக்குள் வந்து சென்றது பதிவாகி இருக்கும்.

4. கடையின் உரிமம் எண் பில் புக்கில் மட்டும்தான் இருக்கும் லெட்ஜரில் இருக்காது. எதிரியின் அடையாள அட்டையை பார்த்து தான் நகையை பெற்றுக் கொண்டேன் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் லெட்ஜர் பதிவிலும் எதிரியின் ஆதார் அடையாள அட்டையிலும் முகவரி வேறுபட்டு உள்ளது என்றால் அப்போது எதிரி முகவரி மாற்றி விட்டதாகவும், தற்போது வேறு முகவரியில் இருப்பதாகவும் சொன்னார். ஆனால் அந்த முகவரிக்கு ஆதார் அட்டை மாற்றப்படவில்லை என்று சொல்லி தான் தற்போது இருக்கும் முகவரியை சொன்னதன் பேரில் லெட்ஜர் புத்தகத்தில் முகவரி எழுதப்பட்டது. நான் இந்த விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி

உள்ளேன்.

5. எதிரி அடமானம் கொடுத்த நகை அவரது நகை இல்லை என்று சந்தேகம் வந்திருந்தால் அருகில் இருக்கும் காவல் நிலையத்திற்கு தகவல் கூறியிருப்பேன் என்றாலும், அவ்வாறு தகவல் கூறாத காரணத்தினால் அந்தநகை எதிரியின் சொந்த நகை என்று சொன்னால் அச்சமயம் எதிரியின் நகை என்று நம்பிதான் அதனை அடமானம் பெற்றுக் கொண்டேன். எதிரி போலீசாருடன் கடைக்கு வந்த வீடியோவை நான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். பொதுவாக எங்கள் கடையில் ஒன்று அல்லது இரண்டு மாதங்கள் மட்டுமே சிசிடிவி பேக்கப் இருக்கும்.

6. 11.07.2025 ஆம் தேதி எங்கள் கடைக்கு எதிரி போலீசார் உடன் வந்தபோது அருகில் இருந்தவர்கள் மற்றும் அருகிலிருக்கும் கடைக்காரர்கள் சுற்றி நின்று பார்த்து இருப்பார்கள் என்றால் பார்த்தார்கள். நான் நகையை அடமானம் பெற சோதித்த போது அதில் எந்த நகைக்கடையின் முத்திரை இருந்தது என்று பார்த்தேனா என்றால் பார்த்தேன், ஆனால் தற்போது ஞாபகம் இல்லை. அதை பற்றி போலீஸ் கேட்காத காரணத்தினால் நான் போலீஸில் சொல்லவும் இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.02.09 18:35:28 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,

ஊத்துக்குளி.